www.tamilarangam.net

அறிவோர்

மார்கழி 2000

# நன்மை–தீமை

நன்மையும் தீமையும் ஒரு தட்டின் இரண்டு பக்கங்கள். நம் வாழ்வின் அடிப்படையே முரண்பாடுகள் நிறைந்தது. நாம் இந்த முரண்பாடுகளுக்கு ஊடே உழன்று கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. நன்மை இருக்கும் இடத்தில் தீமையும் இருந்தே ஆக வேண்டும். தீமை இருக்கும் இடத்தில் நன்மை சிறிதளவாவது இருக்க வேண்டும். வாழ்க்கை இருக்கும் இடத்தில் மரணம் நிழல் போல் தொடர வேண்டும். சிரிப்பவர்கள் அழவேண்டும். அழுபவர்கள் சிரிக்கவேண்டும். நன்மையைத் தவிர தீமையே இல்லாத, சிரிப்பைத்தவிர அழுகையே இல்லாத ஓர் இடம் இருப்பதாக நாம் வேண்டுமானால் கற்பனை செய்து கொள்ளலாம். ஆனால் இயற்கையில் இந்த மாதிரி இருக்க முடியாது. ஏனென்றால், இவற்றை உண்டுபண்ணும் சூழ்நிலைகள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. சிரிப்பை உண்டுபண்ணும் சக்தி எங்கே இருக்கிறதோ, அங்கே அழுகையை உண்டுபண்ணும் சக்தியும் மறைந்திருக்கிறது. இன்பத்தை உண்டாக்கும் சக்தி இருக்கும் இடத்தில், துன்பத்தையும் உண்டாக்கும் சக்தியும் இருக்கிறது. நன்மை-தீமை, இன்பம்-துன்பம் இவற்றின் கலப்பே உலகம். ஒன்று அதிகமானால் இன்னொன்று அதிகமாகும். முழுவதும் நன்மை அல்லது தீமை மட்டுமே நிறைந்த உலகம் இருக்க முடியாது. நன்மை, தீமை இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரான தனித்தனியான குணங்கள் அல்ல. இன்று நல்லது என்று நமக்குப்படுவது நாளை தீமையாகப்படலாம். ஒருவனுக்குத் துன்பத்தை அளிப்பதே மற்றொருவனுக்கு இன்பத்தை அளிக்கிறது. ஒரு குழந்தையை எரித்துக்கொல்லும் நெருப்பு, பட்டினியால் வாடும் இன்னொரு குழந்தைக்கு நல்ல உணவைச் சமைத்துக் கொடுக்கலாம். துன்ப அனுபவங்களை மூளைக்கு எடுத்துச் செல்லும் அதே நரம்புகளே இன்ப அனுபவங்களையும் எடுத்துச் செல்கின்றன. ஆகவே தீமையை ஒழிக்க ஒரே வழி, நன்மையையும் ஒழிப்பதே ஆகும். இதைத் தவிர வேறு வழியே இல்லை. அப்படியாயின் "நற்பணி செய்வதால் பயன் என்ன?" என்று மக்கள் கேட்பார்கள். அதாவது இன்பமாக இருப்பதற்கு ஒரே வழி துன்பத்தைக் குறைக்கப் பாடுபடுவது என்பதுதான் பதில். ஒவ்வொருவரும் இந்த உண்மையை ஏதாவது ஒரு சமயத்தில் புரிந்து கொள்கிறோம். அறிவாளிகள் இந்த உண்மையை சீக்கிரமாகவும், மற்றவர்கள் சற்றுத்தாமதமாகவும் புரிந்து கொள்கிறார்கள். பயனை எதிர்பாராமல் கடமையைச் செய்வதே இதற்கு ஒரே வழியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அழகா?

நீங்கள் ஒரு மலரை விரும்புகிறீர்கள். அதே மலரை அடுத்தவன் வெறுக்கிறான். நீங்கள் விரும்பியதை, ஏன் அடுத்தவன் வெறுக்க வேண்டும்? அந்த மலர் உண்மையிலேயே அழகாக இருந்தால் அந்த இருவரும் அதை விரும்பத்தானே வேண்டும். ஆக, அழகு என்பது உங்கள் மனதில் தான் இருக்கிறதே தவிர அந்த மலரில் இல்லை.அந்த மலர் வெறும் மலராக இயல்பாக இருக்கிறது. அவ்வளவுதான். அதை நீங்கள் அலசிப் பார்த்து, அதை வேறு ஒன்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து இது அழகு,அது அழகில்லை என்று கூறுகிறீர்கள். அதுபோலவே, நன்மை-தீமை, பாவம்-புண்ணியம், நல்லவன்-கெட்டவன் என்பவை எல்லாம். நாம் எமது மனதில் ஏதோ அளவு கோல் வைத்துள்ளோம். அவ்வளவே. ஏனெனில் மனதில் ஆவல், பேராசை, வஞ்சகம், கோபம், காமம் எல்லாம் கலந்தே இருக்கிறது. இதனால்தான் சிந்திக்க முடியவில்லை.

# ஆசை!

அவனுக்கு ஓர் ஆசை. தான் ஆன்மீகத்தில் ஏதாவது சாதனை செய்து காட்ட வேண்டுமென்று. அதிசயமாக ஏதாவது செய்ய வேண்டும். அப்பொழுதுதான் மக்கள் தன்னை பெரிய மகான் என்று நம்புவார்கள் என்று நினைத்தான். உடனே இமயமலைக்குப் போய் கடுமையான நோன்பிருந்தான். கடினமான யோகாசனப் பயிற்சிகள் எல்லாம் செய்தான். காலம் கடந்தது. கடைசியில் ஒருநாள் அவனுக்கு அந்த சித்தி கிடைத்தது. அவனால் இப்போது நீரின் மேல் நடக்க முடியும்! அவன் திரும்பி வரும்போது கங்கை குறுக்கிடுகிறது. ஆனாலும் என்ன? அவனுக்கு கவலை இல்லை. கங்கைக் கரையில் ஒரு பெரியவரைப் பார்க்கிறான்.

*"வாருங்கள் ஆற்றைக் கடந்து அக்கரைக்குப் போகலாம்"* என்று அழைக்கிறான்.

"படகு வரட்டும்" என்கிறார் அவர்.

*"படகு எதற்கு"*

அந்தப் பெரியவர் பார்க்கிறார்.

*"நீரின் மேல் என்னால் நடக்க முடியும்"* என்றான் அவன்.

எப்படி? எனக் கேட்டார் பெரியவர்.

*அப்படிக் கேளுங்கள். சொல்கிறேன். கடுமையாக உழைத்தேன். கற்றுக் கொண்டேன்.* என்றான் அவன்.

எங்கே? என்றார் பெரியவர்.

*இமாலயத்தில்* என்றான் அவன்.

எளிதான பயிற்சியா அது? பெரியவர் கேட்டார்.

*யார் சொன்னது? இடைவிடாமல் முயன்றேன். கடுமையாக உழைத்தேன். பாதியில் விட்டுவிடலாமா என்று கூடத் தோன்றியது. பிடிவாதமாக இருந்தேன். அதன் பின்தான் அந்த சக்தி என்னிடம் வந்தது.* என்றான் அவன்..

www.tamilarangam.net

அதற்கு எவ்வளவு காலம் ஆயிற்று? இது பெரியவரின் கேள்வி. *பதினெட்டு ஆண்டுகள் பிடித்தது. வாருங்கள் அந்த ஆற்றலைக் காட்டு கிறேன்.* என்றான் அவன்.

ஆற்றைக் கடக்க நான் வேறு வழியைக் கையாளுகிறேன். என்றார் பெரியவர்.

*என்ன வழி எனக் கேட்டான்.* அவன்.

ஒரு ரூபாயைக் கொடுத்தால் படகுக்காரன் அக்கரையில் கொண்டு போய் விடுவான். என்றார் அவர். நீ பதினெட்டு ஆண்டுகள் சம்பாதித்த சித்தியின் மதிப்பு வெறும் ஒரு ரூபாய் மட்டுமே. என்று கூறினார் பெரியவர்.

இப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

இயற்கைக்கு மாறான சாதனைகளுக்காக இயல்பான வாழ்க்கையை வீணாக்குவது முட்டாள்தனமே.

# என்னிடம் எதுவும் இல்லை?

"கடவுள் என்னிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டுவிட்டார் மரணத்தைத் தவிர வேறு ஒன்றும் என்னிடம் இல்லை." என்று ஒரு இளைஞன் புலம்பிக் கொண்டிருந்தான்.

இதை ஒரு பிச்சைக்காரன் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் இளைஞனிடம் சொன்னான்.

"உன்னிடம் மறைந்திருக்கும் ஒரு அரிய பொக்கிஷத்தை நான் காண்கி றேன். அதை நீ விற்பாயா? அதை நீ விற்பதால் அடைய முடியாத எல்லாவற்றையும் நீ அடைவாய். கடவுளுக்கும் கெட்ட பெயர் ஏற்படாது." என்றான்.

இளைஞன் ஆச்சரியமடைந்தான்.

"பொக்கிஷமா? என்னிடமா? என்னிடம் ஒரு பைசா கூட இல்லையே" என்றான்.

பிச்சைக்காரன் சிரித்தான். குலுங்கக் குலுங்கச் சிரித்தான். பிறகு சொன்னான்.

"என்னுடன் நீ வா. நாம் அரசனிடம் செல்வோம். அரசன் மிகவும் கெட்டிக்காரன். அவன் நிச்சயமாக உன்னுடைய பொருள்களை நல்ல விலைக்கு வாங்குவான். இதற்கு முன்புகூட, நான் மறைந்து கிடக்கும் பொக்கிஷங்களை விற்கும் பலரை அரசனிடம் அழைத்துச் சென்றுள்ளேன் நல்ல விலை கொடுத்தான்."

இளைஞனால் பிச்சைக்காரனுடைய பேச்சைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இருந்தாலும் அவனுடன் அரண்மனைக்குப் புறப்பட்டான்.

வழியில் பிச்சைக்காரன் சொன்னான். "நாம் முன்னதாக சில விஷயங்களைப் பற்றி முடிவு எடுக்க வேண்டும். ஏனெனில் அரசன் முன்பு நாம் சண்டையிடக் கூடாது. அரசன் விரும்புகிற பொருளை என்ன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலையானாலும் விடமாட்டான். அந்தப் பொருளை நீ விற்பதற்குத் தயாரா? இல்லையா? என்பதை முடிவு செய்ய வேண்டியது அவசியம்." என்றான்.

இளைஞன் அப்போதும் ஆச்சரியமடைந்தான்.

பிச்சைக்காரன் சொன்னான். "உதாரணமாக உன்னுடைய கண்களை எடுத்துக் கொள்ள, அதற்கு நீ என்ன விலை கேட்பாய்? 50,000 ரூபாய் வாங்கித் தர முடியும். இல்லையென்றால், உன்னுடைய இதயம், அல்லது மூளையைக் கொடுக்கிறாயா? அவைகளுக்காக ஒரு லட்சம் ரூபாய் கூட கிடைக்கும்." இளைஞன் அந்தப் பிச்சைக்காரன் ஒரு பைத்தியம் என்று முடிவு செய்தான்.

"உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? கண்களையும், இருதயத்தையும் யாராவது விற்பார்களா? நான் மட்டுமல்ல, யாருமே விற்க மாட்டார்கள்." என்றான்.

பிச்சைக்காரன் சொன்னான், இலட்சக் கணக்கான பெறுமானமுள்ள பொருட்களை விற்க மறுக்கின்ற நீ ஏன் ஏழையைப் போல் பாசாங்கு செய்கிறாய்?

**கடவுள் அநேக பொக்கிஷங்களை கொடுத்திருக்கிறார்.ஆனால் அவற்றை ஒருவன் தானே தோண்டித் தேடிப் பெற வேண்டும்.**

# உணருங்கள்

காற்று சுதந்திரமானதாகவும், எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியதாகவும் இருப்பது போல உண்மைகளை எல்லோருக்கும் கொடுங்கள். ஓர் அறையை பல ஆண்டுகளாக இருள் மூழ்கிக்கிடந்தால், ஓ இருட்டாக இருக்கிறது, இருட்டாக இருக்கிறது என்று அழுவதால் இருட்டு போய் விடுமா? ஓர் விளக்கை அதன் அருகில் கொண்டு சென்றால் இருள் மறைந்து போகும். இதையே நாமும் செய்வோம். மக்களுக்கு உயர்வானவைகளைப் பற்றிச் சொல்லி, அவர்களிடம் நம்பிக்கை கொள்ளுவோம். எப்படிப்பட்ட மனிதர்களாக இருந்தாலும் அவர்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். மனிதன் நன்கு படித்தவனாக இருந்தாலும் சரி, ஒன்றுமே படிக்காதவனாக இருந்தாலும் சரி முதலில் அவனிடம் நம்பிக்கை வையுங்கள். ஒருவனிடம் குறைகள் இருந்தால், அவன் தவறுகள் செய்தால், அவன் காட்டு மிராண்டித்தனமான கொடூரமான கொள்கைகளைப் பின்பற்றினால் அது அவனுடைய உண்மையான இயல்பிலிருந்து வந்ததென்று நினைக்காதீர்கள். அதை விட உயர்ந்தவை கிடைக்காததால் அதைச் செய்கிறான் என்று நம்புங்கள். ஒருவன் பொய்யை நோக்கிப் போகிறான் என்றால், அதன் உண்மை எங்கே இருக்கிறது என்பதை அவனால் காண முடியாததுதான். எனவே ஒருவனைப் பொய்யிலிருந்து சரி செய்ய வேண்டுமென்றால் அவனுக்கு உண்மையைக் கொடுங்கள். இதைச்

www.tamilarangam.net

செய்யுங்கள். அவன் ஒப்பிட்டுப் பார்க்கட்டும். நீங்கள் உண்மையைக் கொடுங்கள். அத்தோடு உங்கள் வேலை முடிந்து விட்டது. அவன் தன்னிடம் ஏற்கனவே உள்ளவைகளோடு இதைத் தன் சொந்த வழியில் ஒப்பிட்டுப் பார்க்கட்டும். நீங்கள் சரியான உண்மையைக் கொடுத்திருந்தால் பொய் மறைந்தே ஆக வேண்டும். உண்மையில் விளக்கு இருளைத் துரத்திவிடும். உண்மை, அவனிடம் உள்ள நல்லதை வெளியே கொண்டுவரும். மக்கள் கெட்டதைச் செய்கிறார்கள் என்று சொல்வதை விட, அவர்களுக்கு முன்னால் நல்லதை வையுங்கள். எவையெல்லாம் நல்லவையோ, எவையெல்லாம் மகோன்னதமானவையோ அதன் கைகள் எல்லோருக்கும் நீளச் செய்யுங்கள். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளுவோம். உண்மையான அன்போடு நாம் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்வோம். உண்மையைக் காணும் ஆழமான அன்போடு நம் சொந்தப் புகழில் சிறிதுகூட ஆர்வம் இல்லாமலும், நம் சொந்த மரியாதையைக் கருதாமலும், சொந்த நன்மையை நினைக்காமலும் இந்த மகத்தான காரியத்தைச் செய்யும் நிலைக்கு நம்மை ஆளாக்குவோம்.

**ஒரு அவுன்ஸ் செயல் இருபத்தைந்து தொன் பெரிய பேச்சுக்களைவிட மதிப்பு வாய்ந்தது** என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

புறத்தூய்மை என்பது உடலைத் தூய்மையாய் வைத்தல்.அழுக்கடைந்த மனிதன் யோகி ஆகமாட்டான். அகத்தூய்மை அவசியம். அகத்தூய்மைக்கு நட்பு, இரக்கம் முதலிய நற்குணங்களைப் பெற வேண்டும். அதாவது எல்லோரிடமும் நட்புக் கொள்ள வேண்டும். துன்பப் படுகிறவர்களிடம் இரக்கத்தைக் காட்ட வேண்டும். மக்கள் மகிழ்ச்சி அடைந்தால் நாமும் மகிழ்வைக் காட்டவேண்டும். தீயவர்களிடம் நாம் அலட்சியமாய் ஆதரவு தராமல் ஒதுங்கியிருக்க வேண்டும். நல்ல பொருளாய் இருந்தால் நட்பும், துன்பத்தில் இரக்கமும், நல்ல விஷயத்தில் மகிழ்வும், தீய விஷயங்களில் அலட்சியமும் கொள்ள வேண்டும். இம் மாதிரி மனப்பாவனைகள் மனதிற்கு அமைதியைத் தரும். தினசரி வாழ்க்கையில் நமக்கு வரும் சிக்கல்கள், இம்மாதிரி மனப்பான்மையை வளர்க்காததாலேயே ஏற்படுகின்றன. சான்றாக, ஒரு மனிதன் நமக்குத் தீங்கு செய்தால் உடனே நாமும் அவனுக்குத் தீங்கு செய்ய எண்ணுகிறோம். இத்தகைய எதிர்ச்செயல்கள் மனதை நாம் அடக்கப் பழகவில்லை என்பதைக் காட்டுகிறது. தீய எண்ண அலைகள் வெளிவந்தால் நாம் நமது வலிமையை இழக்கின்றோம். வெறுப்பாகவோ, தீய எண்ணமாகவோ வரும் ஒவ்வோர் எதிரியக்கமும் மனிதனின் ஆற்றலைக் குறைக்கும். அவற்றைத் தடுத்தால் நாம் வலிமை பெறுவோம். மனதை அச்சமயம் நாம் அடக்குவதனால் நமக்கு இழப்பு ஒன்றுமில்லை. நாம் எதிர்பார்த்ததற்கு மேல் நன்மையே அடைகிறோம். வெறுப்பையும், சினத்தையும் அடக்குவதால் நம்மிடம் சக்தியை சேர்த்து வைக்கிறோம். பின் அவை உயர்ந்த சக்திகளாக பரிணமிக்கும் அகத்தூய்மையின்றி புறத்தூய்மையால் பயனில்லை. நம் மனதை நாமே அடக்கவேண்டும். மற்றவன் அதை அடக்க நேர்ந்தால் கேடு நிகழும். ஆகவே **பிறர் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முயலும்போது எச்சரிக்கையாக இருங்கள்.**

www.tamilarangam.net

# பிரச்சாரம்

பிரச்சாரவாதிகள் தங்கள் கருத்துக்களை உங்கள் மீது திணிப்பார்கள். உங்களை வாய் திறக்க விடமாட்டார்கள். இவர்களுடைய உள்நோக்கம் என்னவென்று நமக்குத் தெரியாது. தங்களுக்குச் சாதகமான உண்மைகளை எடுத்துக்கொண்டு, மற்றவற்றை மறைத்து விடுகிறார்கள். இவர்கள் உண்மைகளைத் திரிக்கிறார்கள். பொய்களை உதிர்க்கிறார்கள். பொய்யும் மெய்யும் சரிபாதி கலந்தே பேசுகிறார்கள். உங்களைச் சிந்திக்க விடாமல் உணர்ச்சிகளைத் தூண்டுவதே இவர்களது இலட்சியம். பிரச்சாரவாதிகள் தாம் சொல்வதெல்லாம் சரியானவை, ஒழுக்கம் நிறைந்தவை என்று முலாம் பூசுகிறார்கள். அவர்கள் சொல்வதைப் பின்பற்றினால் நீங்கள்தான் பெரும்புள்ளி என்று உசுப்பி விடுகிறார்கள். இவர்கள் கும்பலில் சேர்ந்துவிட்டால் எந்தவித பிரச்சனையும் இல்லாமல் வசதியாக வாழலாம் என்று ஆசையைக் கிளறிவிடுகிறார்கள். இப்படிப் பட்டவர்களை பரிசுத்த வேதாகமம் " வீண் பேச்சுக்காரர்கள். மனதை மயக்குகிறவர்கள்" (தீத்து 1:10) என்கிறது. இவர்களிடம் சிக்காமல் இருப்பது எப்படி?. அவர்களுடைய தந்திரமான உத்திகள் நன்றாகத் தெரிந்துவிட்டால், அவர்கள் சொல்லும் விஷயங்கள் உண்மையா? இல்லையா? என்பது தெரிந்துவிடும். பரிசுத்த வேதாகமத்தில் அறிவாளியான சாலமன் எழுதிய அதிகாரம் நீதிமொழிகள் 14:15 ல் " பேதையானவன் எந்த வார்த்தையையும் நம்புவான். விவேகியானவன் நடையின் மேல் கவனமாயிருக்கிறான்." என்று கூறுகின்றார். ஆகவே நீங்கள் பேதையாய் இராமல் விவேகியாயிருங்கள். ஒரு விஷயத்தை சரியாக கணிக்கும் திறன் உங்களிடம் இருக்குமாயின், அவர்கள் கூறும் விஷயங்களை உங்களால் ஆராய்ந்து பார்க்க முடியும். முடிந்தவரை பிரச்சாரம் செய்யும் நபரின் பின்னணியை தெரிந்து கொள்வதும் நல்லது. அதுமட்டுமல்ல அவரிடம், நீங்கள் இந்த விஷயத்தை சொல்வதன் நோக்கம் என்ன? என்பதையும் கேட்டுக்கொள்ளுங்கள். மக்கள் எதையும் கண்மூடித்தனமாக ஏற்கும்வரை குள்ளநரி குணம் கொண்ட பிரச்சாரவாதிகளுக்கு ஏக கொண்டாட்டமே. மக்கள் இவர்களின் தகவல்களை உண்மையா? என்றுகூட ஆராயாமல் வெளுத்ததெல்லாம் பால் என்று நம்புகிறார்கள். " தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ள நினைக்கும் கயவர்களிடம் சிக்காமல் இருக்க முயற்சியுங்கள்" என 2 பேதுரு 2:3 ல் கூறப்படுகிறது.

## சமயப்பிரச்சாரம் சரியானதா?

ஒவ்வொரு சமயப்பிரிவுகளுக்கும் ஏற்றபடி முக்கியமான குணங்கள் மாறுகின்ற நிலையைப் பார்க்கிறோம். ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தத்துவம் ஒன்றுண்டு. அது எதுவெனில், பேச்சிலும், ஒழுக்கத்திலும் அமைதியான ஒரு நிலையே. தங்கள் பிரிவை உயர்த்தி மற்றவர்களுடையதை இகழ்ந்து பேசுவது நல்லதல்ல. வாய்ப்பு வரும்போ தெல்லாம் அதற்குரிய மரியாதையை அளிக்கவேண்டும். இப்படி முயல்வ

www.tamilarangam.net

தால் தான் ஒருவன் தனது கொள்கையைச் சிறப்பிக்கமுடியும். இதுவே மற்றவர்களின் கொள்கைக்கும் தொண்டு புரிந்ததாகும். ஆனால் வேறு விதமாக நடப்பார்களானால், தன் கொள்கையை வளர்ப்பவனாக கருதப்படமாட்டான். தனது கொள்கையின் புகழைப் பரப்புவதற்காக பிற கொள்கைகளைச் சிறுமைப்படுத்துவது, தன் கொள்கையைத் தானே தாக்குவதைப் போன்றது. ஆதலால் சமய சமரசமே போற்றுதற்குரியது. பொறுமையுடன் பிற கொள்கைகளையும், ஒவ்வொருவரும் அன்புணர்ச்சியுடன் கருத வேண்டும். எந்த நிலையில் இருந்தாலும்சரி, ஒழுக்கக் கொள்கைகளையும், மற்ற சமயக் கொள்கைகளையும் எல்லோரும் போற்ற வேண்டும். ஒருவரோடொருவர் மரியாதையுடன் நடப்பதுதான் சிறப்பு. இந்த நோக்கத்துடன்தான் சமயத்தைக் காப்பாற்றுபவர்களும், பரிசீலனை செய்பவர்களும், தொழில் புரிபவர்களும் பணியாற்ற வேண்டும்.

## தெரியுமா?

மதமாற்றம் செய்ய விரும்புபவர்கள் இந்துக்களிடம் சென்றுதான் மதத்தைப்பற்றிப் போதிக்கின்றனர். அவர்கள் இஸ்லாம் மக்களிடம் சென்று மதத்தைப்பற்றி போதிப்பதில்லை. காரணம் இஸ்லாமியர்கள் இச்செயலை எதிர்ப்பார்கள். ஆனால் இந்துவோ அமைதியானவன். இந்த மூடர்கள் பேசட்டும் என்ற சொல்லி புன்முறுவலு டன் அகன்றுவிடுவான். சுகவாழ்வின் பெயரால் பிரச்சாரம் செய்யப்படுகி றது. உனக்கு எது முக்கியம் என ஒரு கிறிஸ்தவரைக் கேட்டால், இயேசு கூறியவையே என்பான். இந்து ஒருபோதும் இயேசுவின் வாழ்வைக் குறை கூறமாட்டான். மலைச் சொற்பொழிவை அவன் மதிக்கிறான். உலகில் ஒரு சிறு பகுதியை மதமாற்றம் செய்வதற்குள் கிறிஸ்தவமதம் பல பிரிவுகளாகப் பிரிந்து போய்விட்டது. **நான்** என்பது அறவே நீங்கட்டும். மூடக் கொள்கைகள் முற்றிலும் அகலட்டும். உலகம் முழுவதும் நிறைந்திருப்பவர் கடவுளே. நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்வோம். நாம் ஒருவருடன் ஒருவர் அன்பாக இருப்போம்.

## மதப்பூசல்களை ஒழிக்க.

மதம் என்பது வெறும் கேள்வி மாத்திரமல்ல. கிளி மாதிரி சில கொள்கைகளை அல்லது வார்த்தைகளை மனப்பாடம் செய்வதுமல்ல. அது வாழ்க்கையில் பின்பற்றி, அனுபூதியாகப் பெறவேண்டிய விஷயமாகும். அது வெறும் புத்தி நுட்பத்தால் வாதித்து தெரிந்து கொள்ளக்கூடியதுமல்ல. அது நம் தினசரி வாழ்க்கையில் நுழைந்து, நம் வாழ்க்கையோடு ஒன்றாகப் பொருந்த வேண்டும். கடவுள் ஒருவர் உண்டென்பதற்குச் சாட்சி, நமது புத்தியின் மூலம் அனுமானிப்பதல்ல. மனிதன் கடவுளை நேருக்கு நேர் கடவுளைக் காணும் வரை, அவனுக்குக் கதி மோட்சமில்லை. மதம் என்பது அனுபூதி அதாவது கடவுளை நேருக்குநேர் கண்டு அனுபவித்தல் என்பதை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்வோமாக. அதைத் தெரிந்து கொள்வோமானால் மதப்பூசல்கள் தானே மறையும். நாமே இருட்டில் இருந்து கொண்டு மற்றவர்களுக்கு எப்படி வழி காட்ட முடியும். சமய

www.tamilarangam.net

வாதத்தில் ஈடுபட்டிருக்கும் ஒருவனைக் கண்டால், அவனை இவ்விதம் கேளுங்கள். நீ கடவுளைக் கண்டிருக்கிறாயா? நீ ஆத்மாவை உணர்ந்திருக்கிறாயா? இல்லையெனில், அவரைப்பற்றி உபதேசம் செய்ய உனக்கு என்ன அதிகாரமிருக்கிறது. இருட்டில் உழலும் நீ மற்றவர்களுக்கு எங்ஙனம் வெளிச்சம் காண்பிப்பாய்? நீ மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பது, குருடனுக்குக் குருடன் வழி காட்டி, இருவரும் விழுந்ததையல்லவா ஒக்கும். ஆகவே, **எல்லோரும் தங்கள் தங்களுக்கேற்ற சாதனை மார்க்கத்தைப் பின்பற்றட்டும். அவரவர்கள் சிரத்தையுடன் தங்கள் உள்ளத்தில் உண்மையைக் காண முயற்சி செய்தால் போதுமானது.**

# உதவி

"ந ஹி கல்யாண க்ருத் கச்சித் துர்கதிம் தாத கச்சதி"

ஓ அன்பனே நன்மை செய்பவன் ஒரு காலத்திலும் துயரப்பட மாட்டான். பிறருக்கு உதவி செய்ய சில நேரங்களில் நிறையப் பணம் தேவைப்படும். உன்னால் எவ்வளவு முடிகிறதோ, அவ்வளவு செய். உன்னிடம் நிறையப் பணம் இல்லையென்றால் பணத்தால் உதவி செய்ய வேண்டாம். ஆனால் மற்றவர்களுக்கு ஊக்கம் பிறக்கின்ற ஆறுதலான கருத்துக்களை, அறிவுரைகளைச் சொல்ல முடியுமல்லவா? அவற்றை நீ ஏன் சொல்லக்கூடாது. அதற்குக் கூடவா பணம் தேவைப்படுகிறது. பலர் செய்ய முடியும் என்பார்கள். ஆனால் செய்ய மாட்டார்கள். செய்ய முடியும் என்பதை செயலில் காட்டவேண்டும். அப்படியில்லாமல் இந்த வாழ்வை நீ எவ்வளவு காலம் வாழப் போகிறாய்?. நீ இந்த உலகத்திற்கு வந்த பிறகு அதற்கான அடையாளம் இருக்கும்படி எதையாவது செய்து விட்டுப் போ. இல்லையென்றால் உனக்கும், இந்த மரங்களுக்கும், விலங்குகளுக்கும் என்ன வித்தியாசம்?. அவையும் தோன்றுகின்றன. வாழ்கின்றன. சாகின்றன. அதைப் போல பிறந்து சாவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் நீ படித்தவை உனக்கு அதிகமாகப் பயன்பட்டது என்பதை நிரூபி. எல்லோரிடமும் சென்று முழங்கு. ஒவ்வொரு நாளும் எத்தனை பேர் பிறந்து புழுக்களைப் போல் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இந்த உலகத்தில் என்ன பெரிய மாறுதல் ஏற்படுகிறது. நீ செத்தே ஆக வேண்டும். தப்ப முடியாது. அப்படி இருக்கும் போது ஒரு மகத்தான இலட்சியத்திற்காக சாவது நல்லது. இக்கருத்தை எல்லோருக்கும் பரப்பு. இதனால் நீயும் நன்மை அடைவாய். உன் நாட்டிற்கும் நல்லது செய்தவனாவாய். எல்லாம் உரிய காலத்தில் நடக்கும் என்று சோம்பேறியாக உட்கார்ந்திருக்காதே. அந்த வழியில் ஒன்றுமே நடக்காது என்பதைத் தெரிந்து கொள்.

| வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் |
|---|

**நீங்கள் படிப்பவைகளுள்ளும் பிறருக்குப் பயன்படும் எனக் கருதுபவைகளை அறிவோர் பக்கத்திற்குச் சேர்ப்பியுங்கள்.**

தொடர்புகளுக்கு

*N.Varatharajah, 6 Rue des champs de la ville, 45500 Gien. France.*